2012 ஏப்ரல் 24]

153—

சரணாலயம்

***7904—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர், பெரியபாளையம் குளத்தில் பறவைகள் சரணாலயம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆனைமலை புலிகள் காப்பக மண்டலக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டுவரும் திருப்பூர் வனக் கோட்டப் பகுதியில் அமைந்துள்ள அவினாசி வட்டம், பெரியபாளையம் பகுதியில் அமைந்துள்ள குளம், முறைசாரா குளம் ஆகும். மேலும், இக்குளம் திருப்பூர் சாயப்பட்டறைகளின் கழிவுநீரால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே அங்கு பறவைகள் சரணாலயம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்துக்குளிக்கு அருகில் பெரியபாளையத்தில் உள்ள 250 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள குளம், மிகப் பெரிய குளம் ஆகும். பல நூற்றாண்டுக் காலமாக இந்தக் குளத்தில் வெளி நாடுகளிலிருந்து 80 வகையான அரியவகைப் பறவைகள் வந்து செல்கின்றன. தற்போது சாயப்பட்டறைக் கழிவுகள் சுத்தம் செய்யப்பட்டுவிடுகிற காரணத்தினால், எதிர்காலத்தில் இந்தப் பறவைகள் சரணாலயத்தை அமைப்பது பொருத்தமாக இருக்கும். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—30

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை புலிகள் காப்பக மண்டலக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டுவரும் திருப்பூர் கோட்டப் பகுதியில் அமைந்துள்ள அவினாசி வட்டம், பெரியபாளையம் பகுதியில் உள்ள குளம், முறைசாரா குளமாகும். இக்குளத்தினுடைய நீர்ப்பிடிப்புப் பகுதி 12.39 மில்லியன் சதுர அடியாகும். இக்குளத்தில் ஏற்கெனவே வளர்ந்துள்ள கருவேல மரங்களில் தற்போது எக்ரட், சேன்டுபைப்பர், ஃபிளம்பிங்கோ, பெயிண்ட்டடு ஸ்டார்க் போன்ற உள்நாட்டுப் பறவைகள் மட்டும் அவ்வப்போது தங்கி, இனப் பெருக்கம் செய்கின்றன. இக்குளம் தற்போது திருப்பூர் சாயப் பட்டறைகளின் கழிவுநீரால் மிகவும் மாசுபட்டுள்ளது. இந்நிலையில், இப்பகுதியில் பறவைகள் சரணாலயம் அமைக்க இயலாத நிலை உள்ளது. இக்குளத்தில் தேங்கியுள்ள சாயக் கழிவு நீரினை முற்றிலுமாக வெளியேற்றி, தூர்வாரி, தூய்மைப்படுத்தினால் மட்டுமே பறவைகள் சரணாலயம் அமைப்பதற்கான முன்னோட்டப் பணிகள் தொடங்க இயலும். தற்போது பொதுப் பணித் துறையின்மூலம் ரூபாய் 205 இலட்சம் மதிப்பீட்டில் இக்குளத்தைத் தூய்மைப்படுத்துகின்ற பணி நடைபெற்று வருகின்றது. இப்பணிகள் முடிந்த பின்னர், திருப்பூர், பெரியபாளையம் குளத்தில் பறவைகள் சரணாலயம் அமைப்பதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*